Regional Bulletin / Puducherry / Tamil Script / 13.07-2024

**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : சரவணகுமார்**

**நேரம் : மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி மும்பையில் 29 ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களுக்கும் இன்று அடிக்கல் நாட்டினார்.

துடிப்பான கிராமங்கள் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா புதுடெல்லியில் இன்று ஆய்வு செய்தார்.

நாடு முழுவதும் 7 மாநிலங்களுக்கு உட்பட்ட 13 சட்டப் பேரவை தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத் தேர்தலில் பதிவான வாக்கு எண்ணிக்கை இன்று நடைபெற்றது.

புதுச்சேரி அரசின் ஆதிதிராவிடர் நலம் மற்றும் பழக்குடியினர் நலத்துறையின் கல்வி உதவித் தொகை பெறுவதற்கான இணையதள விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

மோடி (11)

பிரதமர் திரு நரேந்திர மோடி மும்பையில் 29 ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பிலான சாலை, ரயில்வே, துறைமுக திட்ட பணிகளை நாட்டிற்கு அர்ப்பணித்து, வேறு பல திட்டங்களுக்கும் இன்று அடிக்கல் நாட்டினார். இந்திய செய்தி நிறுவன செயலகத்தின் கோபுரத்தையும் அவர் இன்று நாட்டிற்கு அர்ப்பணிக்கிறார். 16 ஆயிரத்து, 600 கோடி ரூபாய் மதிப்பிலான தானே, பொறி வளி, சுரங்கப் பாதை திட்டம், 6 ஆயிரத்து 300 கோடி ரூபாய் மதிப்பிலான கோரிக்கான் முலூந்த் சாலை சுரங்கத் திட்டம் உள்ளிட்டவையும் இதில் அடங்கும். லோக மானிய திலக் ரயில் முனையத்தின் நடைமேடைகளையும், சத்ரபதி சிவாஜி மகராஜ் முனையத்தில் உள்ள தளங்களின் விரிவாக்கத்தையும் அவர் இன்று நாட்டிற்கு அர்ப்பணிக்கிறார்.

அமித் ஷா (19)

துடிப்பான கிராமங்கள் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா புதுடெல்லியில் இன்று ஆய்வு செய்தார். இது குறித்து இன்று நடைபெற்ற உயர் நிலை கூட்டத்தில் பேசிய அவர், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு எல்லையோர கிராமங்களில் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு உறுதி

பூண்டுள்ளதாக தெரிவித்தார். மேலும், எல்லையோர கிராமங்களில் இருந்து, மக்கள் இடம் பெயர்வதை தடுக்க உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டியதன் அவசியத்தையும், கிராமங்களுடனான தொடர்பை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தையும் அமித் ஷா வலியுறுத்தினார். எல்லைப் பகுதி கிராமங்களை சுற்றி பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள மத்திய ஆயுதக் காவல் படைகளும், ராணுவமும், கூட்டுறவு அமைப்புகள் மூலம் உள்ளூர் விவசாய பொருட்களையும், கைவினை பொருட்களையும் ஊக்குவிக்க வேண்டும் என்று அவர் கூறினார். ராணுவமும், ஆயுதப் படைகளும் அருகில் உள்ள கிராமங்களில் வசிப்பவர்களுக்கு பயன் அளிக்கும் வகையில், சுகாதார வசதிகள் தொடர்ந்து கிடைக்க வகை செய்ய வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். இப்பகுதிகளில் சூரிய சக்தி, காற்றாலை போன்ற புதுப்பிக்கத் தக்க எரி சக்தி ஆதாரங்களை அதிக அளவில் பயன் படுத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

இடைத்தேர்தல் (14)

நாடு முழுவதும் 7 மாநிலங்களுக்கு உட்பட்ட 13 சட்டப் பேரவை தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத் தேர்தலில் பதிவான வாக்கு எண்ணிக்கை இன்று நடைபெற்றது. ஜலந்தர் மேற்கு சட்டமன்ற தொகுதியில் ஆளும் ஆம் ஆத்மி கட்சி வெற்றி பெற்றுள்ளது. இமாச்சலில்

ஆளும் காங்கிரஸ் கட்சி 2 இடங்களையும், பாஜக 1 இடத்தையும் கைப்பற்றியது. மேற்கு வங்கத்தில் ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் ராய்கஞ்ச் மற்றும் பாக்தா தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது. உத்ரகண்ட் மாநிலத்தில் உள்ள பத்ரிநாத் சட்டப்பேரவை தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் திரு லக்வத் சிங் புட்டோலா வெற்றி பெற்றுள்ளார். மத்திய பிரதேச மாநிலம் அமர்வாரா தொகுதியில் பாஜக வேட்பாளர் திரு கமலேஷ் பிரகாஷ் ஷா வெற்றி பெற்றார். பீகார் ரூபாலி சட்டமன்ற தொகுதியில், சுயேட்சை வேட்பாளர் திரு சங்கர் சிங் வெற்றி பெற்றார். தமிழகத்தின் விக்ரவாண்டி சட்டப் பேரவை தொகுதி இடைத்தேர்தலில் திமுக வேட்பாளர் திரு அன்னியூர் சிவா வெற்றி பெற்றுள்ளார்.

*கடல் சார் போக்குவரத்து (16)*

மத்திய அரசின் துறைமுகங்கள், கப்பல் நீர் வழிகள் அமைச்சகம், மாநிலங்களில் கடல் சார், நீர் வழி போக்குவரத்து குழுக்களின் கூட்டத்தை வரும் 16 ஆம் தேதி காலை 10 மணிக்கு காணொளி மூலம் நடத்த உள்ளது. இக் கூட்டத்திற்கு மத்திய கப்பல் துறை செயலாளர் திரு டி.கே. ராமச்சந்திரன் தலைமை வகிக்க உள்ளார். இந்தியா முழுவதும் கடல் சார் போக்குவரத்திலும், பிற நீர் வழி போக்குவரத்திலும் விரிவான வளர்ச்சியை உறுதி செய்வதை இந்த குழு நோக்கமாக கொண்டுள்ளது. மாநிலங்கள்

சார்ந்த கடல் சார், நீர் வழி போக்குவரத்து திட்டங்களை தயாரித்தல், கடல் சார் கொள்கைகளை உருவாக்குதல், பசுமை முன் முயற்சிகள், நீர் வழித் தடங்கள் மேம்பாடு, கப்பல் சுற்றுலா, நகர்புற நீர் வழி போக்குவரத்து, கலங்கரை விளக்கங்கள் மேம்பாடு ஆகியவை தொடர்பாக இந்த கூட்டத்தில் ஆலோசிக்கப்படும். ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள மாநிலக் குழுக்களின் பணிகளில் உள்ள முன்னேற்றம், சாகர் மாலா திட்டத்தை செயல்படுத்துவது, சரக்கு போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டம், கடலோர மற்றும் ஆற்றுக் கப்பல் சுற்றுலா தொடர்பாக மாநிலங்களுடனான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் உள்ளிட்டவை குறித்தும் இக் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்படும்.

*சந்திரசூட்* (13)

இந்திய தலைமை நீதிபதி திரு டி ஒய் சந்திரசூட் உத்திரபிரதேச முதல்வர் திரு யோகி ஆதித்யநாத் ஆகியோர் இன்று லக்னோவில் உள்ள டாக்டர் ராம் மனோகர் லோகியா தேசிய சட்டப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கினர். தொடர்ந்து மாணவர்களிடையே பேசிய தலைமை நீதிபதி, சட்டக் கொள்கைகளை எளிய முறையில் பொதுமக்களுக்கு விளக்க முடியவில்லை என்றால், வழக்கறிஞர் தொழிலிலும், சட்ட கல்வியிலும்

குறைபாடு உள்ளது என்றும், பிராந்திய மொழிகளில் சட்டம் கற்பிக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார். அம்மாநில முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் பேசுகையில், நல்லாட்சிக்கு சட்டத்தின் ஆட்சியே முதன்மை என்றும், இந்தியா இப்போது சட்டத்தின் ஆட்சிக்கு அங்கிகாரம் பெற்றுள்ளது என்றும், நாட்டின் பார்வையை மாற்றுவதிலும் சட்டம் முக்கிய பங்கு வகிக்கிறது என்றும் கூறினார்.

வேவ்ஸ் (14)

கோவாவில் முதலாவது உலக ஒலியும்-ஒளியும் மற்றும் பொழுது போக்கு உச்சி மாநாட்டை இந்த ஆண்டு நவம்பர் 20 முதல், 24 வரை இந்தியா நடத்துகிறது. புதுடெல்லியில் இன்று நடைபெற்ற தொடக்க விழாவில் உரையாற்றிய கோவா முதலமைச்சர் திரு பிரமோத் சாவல் உலகிலேயே அதிக திரைப்படம் தயாரிக்கும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று என்றார். இந்தியாவின் ஊடக மற்றும் பொழுதுபோக்கு துறையின் எதிர்காலத்தை வடிவமைக்கும் முக்கிய நிகழ்வாக இந்த வேவ்ஸ் மாநாடு இருக்கும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார். கூட்டத்தில் உரையாற்றிய மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ், இந்தியாவின் பொழுதுபோக்கு துறையின் வளர்ச்சியில் வேவ்ஸ் ஒரு குறிப்பிடத் தக்க மைல் கல்லாக இருக்கும் என்றார். ஊடகம்

மற்றும் பொழுதுபோக்கு துறையின் அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்குவதில் கவனம் செலுத்தப்படுவதாகவும், ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு ஊடகம் ஒரு கட்டமைப்பு மாற்றத்தை சந்தித்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

*அமர்நாத்* (10)

ஜம்முவில் உள்ள பகவதி நகர் யாத்ரி நிவாஸ் முகாமில் இருந்து, காஷ்மீர் பள்ளத்தாக்கு வழியே, 4 ஆயிரத்து 669 யாத்ரீகர்கள் குழு அமர்நாத் குகை கோவிலுக்கு புறப்பட்டு சென்றனர். இன்று அதிகாலை 183 வாகனங்கள் கொண்ட குதிரைப் படையில் அடிவார முகாமில் இருந்து பக்தர்கள் புறப்பட்டனர். இந்த குழுவில், 3 ஆயிரத்து 418 ஆண்கள், ஆயிரத்து 130 பெண்கள், 23 குழந்தைகள், 96 சாதுக்கள் மற்றும் 2 சாத்விகள் உள்ளனர். இவர்களில் ஆயிரத்து 630 யாத்ரீகர்கள் காலை 3.5 மணிக்கு பால்டால் முகாமிற்கும், 3 ஆயிரத்து 39 பேர் பஹல்காம் தல முகாமிற்கும் புறப்பட்டு, அங்கிருந்து, புனித அமர்நாத் குகைக்கு தங்கள் பயணத்தை மேற்கொள்வார்கள்.

*பணி நிரந்தர ஆணை* (12)

மத்திய அரசின் தேசிய பால்வள அபிவிருத்தி திட்டத்தின் கீழ், அரியூர், மங்கலம், பிள்ளையார்குப்பம், கடுவனூர், கொரவளிமேடு ஆகிய 5 கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களில் தலா 3 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் குளிருட்டும் நிலையங்கள், 96 லட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ளது. இந்த நிலையங்களை முதலமைச்சர் திரு ரங்கசாமி காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார். தொடர்ந்து, பான்லே நிறுவனத்தில் தினக்கூலியாக பணியாற்றி வந்த 31 பேருக்கு நிரந்தர பணி ஆணையையும் முதலமைச்சர் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சட்டப்பேரவைத் தலைவர் திரு செல்வம், அமைச்சர்கள் திரு தேனீ ஜெயக்குமார், திரு சாய் ஜெ சரவணன் குமார், திரு திருமுருகன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு ஏகேடி ஆறுமுகம், திரு செந்தில்குமார், கூட்டுறவு செயலர் திரு நெடுஞ் செழியன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

*லட்சுமி நாராயணன்* (10)

புதுச்சேரி சுற்றுலாத் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன் அமெரிக்காவில் நியூயார்க் நகரில் உள்ள இந்திய தூதர் திரு பினாய் ஸ்ரீகாந்த் பிரதான், துணைத் தூதர் திரு வருன் ஜெப் ஆகியோரின்

அழைப்பை ஏற்று, நியூயார்க் நகரில் உள்ள இந்திய தூதுவர் மாளிகையில் புதுச்சேரி சுற்றுலா மேம்பாடு குறித்து ஆலோசனை நடத்தினார். மேலும், சுற்றுலா சார்ந்த தொழில் அதிபர்கள், ஹோட்டல்கள், தங்கும் விடுதி உரிமையாளர்களுடன் புதுவை சுற்றுலாவை மேம்படுத்துவது குறித்து ஆலோசனை நடத்தி, பின்னர் இந்திய தூதரகம் சார்பில் சுற்றுலா, தொழில்நுட்பத் துறை கட்டமைப்புகள், மேம்பாடு முதலீடுகள், முன்னெடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

சென்டாக் (12)

புதுச்சேரியை பூர்வீகமாக கொண்டுள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு முழு கல்விக் கட்டணம் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் கல்வி கட்டணங்கள், கல்வி நிறுவனங்களின் வங்கி கணக்கில் செலுத்தப்படுகிறது. புதுச்சேரி சென்டாக் வழங்கும் தர வரிசையின் அடிப்படையில் மருத்துவ மாணவர்களுக்கான கல்வி கட்டணத்தை ஆதிதிராவிடர் நலத்துறை சென்டாக் நிறுவனத்திற்கு முன் கூட்டியே செலுத்தி விடுகிறது. புதுச்சேரியில் உள்ள அனைத்து கல்லூரிகளுக்கும் மாணவர் சேர்க்கையின் போதும், கல்வியாண்டு தொடங்கும் போதும் கல்வி கட்டணத்தை ஆதிதிராவிடர் நலத்துறை செலுத்தும் என்பதால், மாணவர்களிடம் கல்வி

கட்டணம் செலுத்த வற்புறுத்த கூடாது என்று இத்துறை இயக்குநர் திரு இளங்கோவன் சென்டாக் நிறுவனத்திற்கு அறிவுறுத்தி உள்ளார்.

*கல்வி உதவித் தொகை (13)*

புதுச்சேரி அரசின் ஆதிதிராவிடர் நலம் மற்றும் பழக்குடியினர் நலத்துறையின் கல்வி உதவித் தொகை பெறுவதற்கான இணையதள விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக அறிவிக்கப் பட்டுள்ளது. 2024-25 ஆம் கல்வி ஆண்டிற்கான, கல்வி உதவித் தொகை பெற விரும்பும் தகுதி உள்ள அட்டவணை இனத்தவர் மற்றும் பழங்குடியினர் மாணவர்கள் இணைதளம் மூலம் ஆகஸ்ட் 31 ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. அங்கீகரிக்கப் பட்ட அரசு உதவிப் பெறும் கல்வி நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் பயிலும் மாணவர்கள் அரசு கல்வி கட்டணக் குழுவால் நிர்ணயிக்கப் பட்ட தொகை முழுவதும் பெறுவதற்கு தாங்கள் கல்வி பயிலும் நிறுவனங்கள் மூலம் விண்ணப்பிக்க வேண்டும். இத்திட்டத்தில் பயன் பெறும் மாணவ-மாணவியர்கள் மத்திய அரசின் கல்வி உதவித் தொகை திட்டத்தில் விண்ணப்பிக்க வேண்டாம் என்று துறை இயக்குநர் திரு இளங்கோவன் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட் (5)

ஹராரே நகரில் நடைபெறும் 4 ஆவது டி-20 கிரிக்கெட் போட்டியில் இன்று இந்தியா மற்றும் ஜிம்பாபே அணிகள் மோதுகின்றன. டாஸ் வென்ற இந்திய அணி முதலில் பந்து வீச்சை தேர்வு செய்துள்ளது. தொடர்ந்து ஆடும் ஜிம்பாபே அணி சற்று முன் வரை -------- ஓவர்களில், -------- விக்கெட் இழப்பிற்கு, ------- ரன் எடுத்துள்ளது.

வானிலை (7)

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக இன்று முதல் வரும் 19 ஆம் தேதி வரை தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும், மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய தென் தமிழக கடலோர பகுதிகளில் வரும் 15 ஆம் தேதி வரை சூறாவளி காற்று மணிக்கு 35 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக் கூடும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு நரேந்திர மோடி மும்பையில் 29 ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களுக்கும் இன்று அடிக்கல் நாட்டினார்.

துடிப்பான கிராமங்கள் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா புதுடெல்லியில் இன்று ஆய்வு செய்தார்.

நாடு முழுவதும் 7 மாநிலங்களுக்கு உட்பட்ட 13 சட்டப் பேரவை தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத் தேர்தலில் பதிவான வாக்கு எண்ணிக்கை இன்று நடைபெற்றது.

புதுச்சேரி அரசின் ஆதிதிராவிடர் நலம் மற்றும் பழக்குடியினர் நலத்துறையின் கல்வி உதவித் தொகை பெறுவதற்கான இணையதள விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக அறிவிக்கப் பட்டுள்ளது.